# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்

அசல் வழக்கு எண். 69 /2018

நாள்: 19.11.2025

பெயர்: செல்வகுமார் (வா.சா.2) த/பெ: கிருஷ்ணமூர்த்தி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை...</u>

1. இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு வாதிதான் அழைத்து வந்தார். இந்த வழக்கில் நான்கெல்லையில் எனக்குண்டான நிலம் இல்லை. இந்த வழக்கு சொத்தின் **சர்வே எண் 263/6B** ஆகும். அதன் உட்பிரிவு குறித்தோ அல்லது எப்போது உட்பிரிவு செய்யபட்டதோ தெரியாது. வாதி **சர்வே எண் 263/6B** க்கு தான் வழக்கு தாக்கல் செய்தார். வாதி அந்த சர்வே எண்ணிற்கு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. **சர்வே எண் 263/6B** இந்த வழக்கு குறித்த பட்டா எண் பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து வாதிக்கு எப்படி பாத்தியம் என்பது குறித்து எனக்கு தெரியும். எப்படி பாத்தியம் எனென்றால் அது கலியபெருமாளிடமிருந்து வாதியின் தகப்பனார் வாங்கியது. எந்த காலத்திலும் கலியபெருமாளிடமிருந்து வாதியின் தகப்பனார் தாவா சொத்தை கிரையம் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

2. நான் எனது பிரமாணவாக்குமூலத்தில் 35 வருடமாக அறுவடை செய்துவருகிறார் என்று கூறியுள்ளது வாதி கேட்டுக்கொள்ளதக்கதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை எந்த காலத்திலும் வாதி அனுபவம் செய்யவில்லை, பிரதிவாதிகள் அனுபவம் செய்துவருவதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி, பிரதிவாதி இருவரும் எனக்கு பங்காளி முறையாகும். எனக்கும் பிரதிவாதிகளுக்கு இருந்த முன்விரோதத்தின்

காரணமாக நான் அவர்களுக்கு எதிராகவும் வாதிக்கு ஆதராவாகவும் பொய் சாட்சியம் கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ஒப்பம்/– செல்வகுமார்

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி,
என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து
காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு
கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/– S.தனலெட்சுமி
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.